**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 246/2017**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 13.10.2025 | | |
| பெயர்: | மதனா<br>(DW–1 Cross ) | கணவர் பெயர்: | அருண் பாண்டியன் |
| கிராமம்: | அல்லிவிளாகம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 30/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :13.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.42)**

1. எனது தகப்பனார் பெயர் அமிர்தலிங்கம். இந்த வழக்கில் அவர் 1ம் பிரதிவாதி. 2, 3 பிரதிவாதிகள் எனது சகோதரிகள். எனது தகப்பனாருக்கு தமிழ்செல்வி என்பவருடன் முதல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது தகப்பனார் மற்றும் தமிழ்செல்விக்கு சண்முகசுந்தரம், சண்முக பிரியா மற்றும் சுகன்யா ஆகியோர் மகன் மற்றும் மகள்கள் என்றால் சரிதான். சுகன்யா என்பவர் கடந்த 2018ம் வருடம் இறந்துவிட்டார்.

2. சண்முகசுந்தரம் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். சண்முகசுந்தரம், சண்முக பிரியா மற்றும் சுகன்யா மூவருக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. எனது சகோதரிகளான 2, 3 பிரதிவாதிகளுக்கும் திருமணம் முடிந்துவிட்டதென்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. இந்த வழக்கில் எனது சார்பாக 1ம் பிரதிவாதியான எனது தகப்பனார் சாட்சியம் அளிப்பாரா என்றால் அளிப்பார்.

3. இந்த வழக்கின் வாதி A, B, C என்று 3 அட்டவணை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். A அட்டவணை சொத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் 5 அயிட்டம் உள்ளது. தாவா A அட்டவணை சொத்துக்கள் சண்முகசுந்தரம் வசத்தில் உள்ளதென்றால் சரியல்ல. தாவா A அட்டவணை சொத்துக்கள் யார் வசம் உள்ளது என்றால், புல எண் 144/7, 144/9, 144/10, 144/11 ஆகியவை சிங்காரவேலன் வசம் உள்ளது. புல எண் 165/1 யார் வசம் உள்ளது என்றால், எனது தாயார் தனலெட்சுமி வசம் உள்ளது, அதில் 5 செண்ட் மட்டும் சிங்காரவேலன் வசம் உள்ளது.

4. புல எண் 165/1 என்பது 2 பகுதிகளாக உள்ளது என்று இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்கள் 133/8, 145/7, 162/1, 400/5B, 153/3 ஆகியவை வழக்கு சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்பது மொத்த விஸ்தீரணம் 2 ெ ஹக்டேர் 47 ஏர்ஸ் க்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ெ ஹக்டேர் 47 ஏர்ஸ்-ம் சோமசுந்தரம் மகன் அமிர்தலிங்கம் சாகுபடி செய்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்பது நகைக்கடன் பெறுவதற்கு மட்டுமே வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் யார் வாங்கினார்கள் என்றால் நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து வாங்கினோம். பி.வா.சா.ஆ.1 ல் உள்ள மேலொப்பம் என்பது மனு கொடுத்து வாங்கப்பட்டதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் தங்க நகைக்கடன் பெறுவதற்காக வேண்டி கிராம நிர்வாக அலுவலரிடம் சொன்னதின் பேரில் கொடுக்கப்பட்டது.

6. பி.வா.சா.ஆ.2 ஆவணம் என்பது புல எண் 144/7, 144/9, 144/10, 144/11 மற்றும் 165/1 க்கு மட்டும்தான் என்றால் சரிதான். மேற்கண்ட 5 புல எண்களுக்கும் கூடுதல் விஸ்தீரணம் எவ்வளவு என்று எங்கேயும்

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திலுள்ள 5 புல எண்களில் உள்ள நிலங்கள் சோமசுந்தரம் மகன் அமிர்தலிங்கம் மற்றும் சரவணன் மனைவி அருணா பெயர்களில் உள்ளதென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் அமிர்தலிங்கம் மற்றும் அருணாவின் வசத்தில் உள்ளதென்றோ அல்லது சாகுபடியில் உள்ளதென்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள தேதியிலேயே பி.வா.சா.2 ஆவணத்திலும் வட்டாட்சியரிடம் கையெழுத்து பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 165/1ல் எனது தாயார் தனலெட்சுமி வசம் உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் உண்மையான அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை, எனது தகப்பனார் செல்வாக்கால் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

8. புல எண்கள் 154/1, 128/8, 118/5A, 118/5B ஆகிய நிலங்கள் புஞ்சை வகைப்பாட்டைச் சார்ந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக் சொத்தாக கிடைக்கப்பெற்று எனது தகப்பனாருக்கும், அவரது சகோதரர் ஜெயக்குமாருக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.17)**